## நாம் அடுத்து “ந” எழுத்தை எழுத ஆயத்தமாகுவோம்.

தரம் :- 1
பாடம் :- தாய்மொழி
பாடம் :- எழுத்துக்களை எழுதுவோம்.
செயலட்டை இல- 11 காலம்: மார்ச் 2ம் வாரம்

- சப்ரகமுவ மாகாணக்கல்வித் திணைக்களத்தினூடாக தயாரிக்கப்பட்டுள்ள “வீட்டிலிருந்து-எழுதுவோம்” வீடியோவை அல்லது e-nenapiyasa.lk ஊடாக “வீட்டிலிருந்து-எழுதுவோம்”இதில் ஆசிரியர் எழுத்தை எழுதும் படிமுறையைப் பார்த்து பெரியவர்கள் கீழ்வரும் முறையில் பிள்ளைகளுக்கு உதவ முடியும்.
- இந்த வீடியோ சப்ரகமுவ மாகாணத்தின் அனைத்து வலய,கோட்டக்கல்விக் காரியாலயங்களிலும் ஆரம்பக்கல்விப்பிரிவில் PenDrive, DVD கொண்டு சென்று பெற்றுக்கொள்ளமுடியும்.
- வீடியோ வசதியற்ற பிள்ளைகள் சப்ரகமுவ மாகாணக்கல்வித் திணைக்களத்தினூடாக தயாரிக்கப்பட்டுள்ள “எழுத்துப் பழகு” அச்சுப்பிரதியினை செயல்நூலைப் பயன்படுத்த முடியும்.

## “ந” எழுத்தை எழுதுவோம்

**படிமுறை - 1**

- **“ந”எழுத்து முதல் / இடையில் காணப்படும் இரண்டு,மூன்று சொற்களை உரத்து கூறுவார்.**(செவிமடுத்து கூறுவோம். (20நிமி)
- **சொற்களில் முதல் / இடையில் “ந” ஓசை என்பதை இனங்காணுவர்.** (உச்சரிப்போம்)
- **<u>செவிமடுப்பதற்காக கூறுவோம்</u>.**
  <u>இறுவட்டினை</u> கவனமாக அவதானியுங்கள்.கீழ்வரும் சொற்களை பிள்ளைகளுக்கு செவிமடுப்பதற்காக கூறுங்கள்.அதன்போது சரியான உச்சரிப்பு தொடர்பாக கவனத்தில் கொள்க.தேவைக்கமைய மீண்டும் மீண்டும் செய்க.உச்சரித்து சொற்பயிற்சிப்பெறல் (சொற்களை உச்சரிப்பதற்காக மட்டும்)

| | | |
|---|---|---|
| **நரி** | **நண்டு** | **நத்தை** |

உரத்து பிள்ளைக்கு கேட்கும்படி கூறுங்கள் /பிள்ளையுடன் இணைந்து கூறுங்கள்.

**படிமுறை - 2**

- **வெற்று வெளியில் (ஆகாயத்தில்) எழுதுவோம்.** “ந” எழுத்தை உரத்து கூறிக்கொண்டு வெற்று வெளியில் எழுதுவோம். (05நிமி)

**படிமுறை - 3**

- **மணல்தட்டில் எழுதுவோம்.** (“ந” எழுத்தை மணல்தட்டில் எழுதுவார்.) (03நிமி)



மணல்தட்டு

- முதலில் சுத்தமான மணலைத் தயார்செய்து கொள்க.
- நீங்கள் தெரிவு செய்த இடத்தில் அல்லது பொருத்தமான தட்டு அல்லது முற்றத்தில்/பாத்திரத்தில் மணலைப் பரப்பி விடுங்கள்.

- இப்போது இறுவட்டில் காட்டப்படும் முறையில் மணல் மீது பிள்ளையை எழுத வழிப்படுத்துங்கள்.

**படிமுறை – 4**

- **பஞ்சரேகைக் கொப்பியில் எழுதுவோம்.**(பஞ்சரேகைக் கொப்பி ஒன்றை வாங்கிக்கொள்வது அவசியமாகும்)
    - பஞ்சரேகையிடை "**ந**" எழுத்தை மீண்டும் மீண்டும் எழுத எழுதுதல்(25நிமி)
- **இப்போது பஞ்சரேகை கொப்பியில் "ந" பிள்ளையை எழுத வழிப்படுத்துங்கள்.** (பஞ்சரேகைக்கொப்பியை பயன்படுத்துங்கள்)
- எழுத்தை பலமுறை எழுதுவோம்.(பல தடவைகள் எழுதுவது மிகவும் பொருத்தமாகும்)(வீடியோ அல்லது "எழுத்துப் பழகு" செயல்நூலைஎன்பவற்றினைப் பயன்படுத்துங்கள்.

**படிமுறை – 5 தனிரேகைக் கொப்பியில் எழுதுவோம** (தனிரேகையிடை "ந" எழுத்தை மீண்டும் மீண்டும் எழுதுவோம்) (15நிமி)

- இப்போது தனிரேகை கொப்பியில் பிழையின்றி "ந" பிள்ளையை எழுத வழிப்படுத்துங்கள்.
  (வீடியோ அல்லது "எழுத்துப் பழகு" செயல்நூலை என்பவற்றினைப் நன்றாக அவதானித்து தனிரேகை கொப்பியில் எழுத உதவுங்கள்.
- எப்போதும் உதவுங்கள்.
- ஊக்கமளியுங்கள்

**மேலதிக படிமுறை**

- பல்வேறு எழுத்துக்களில் ஆரம்பமாகும் படங்களுடன் கூடிய சொல்லட்டைகளிலிருந்து "ந" எழுத்துடன் கூடிய படத்தினை தெரிவு செய்வதை ஓர் விளையாட்டாக பிள்ளையுடன் இணைந்து விளையாடுங்கள்.

**கணிப்பீடு**

- உங்கள் பிள்ளை முறையாக பிழையின்றி "ந" எழுத்தை எழுதும் வரைஇந்த குறியீட்டுத் தொகுதியிலிருந்து பொருத்தமான குறியீடு பலவற்றினைப் வழங்குங்கள்.(ஸ்டிகர் அட்டைகளைப்பயன்படுத்த முடியும். ☺ ★ ✓
- உங்கள் பிள்ளை "ந" எழுத்தை எழுதுவதற்கு முயற்சி செய்தால் வரைஇந்த குறியீட்டுத் தொகுதியிலிருந்து பொருத்தமான குறியீடு ஒன்றினைப் வழங்குங்கள்.(ஸ்டிகர் அட்டைகளைப்பயன்படுத்த முடியும். ☺ ★ ✓

**தேவையாயின் மேலதிக உதவிகள் மற்றும் பின்னூட்டலைப் பெற்றுக்கொடுங்கள்**